அவர்கள் நியமிக்கப்படவில்லை. கைடு லைன்ஸ் குழுவிற்கு அமைக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்கள் நம்முடைய அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவில்லை. மத்திய சர்க்கார், எலெக்ட்ரிசிட்டி போர்டு நிறுவனம் போன்றவற்றை அடங்கியவர்களாக இருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சொன்னது போல் 'It is only advisory' அவர்கள் கொடுக்கின்ற ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. எனவே, அதற்குக் காத்திருக்காமல் முடிவு செய்ய வேண்டும் என்றுகூட நாம் சொல்லியிருக்கிறோம்.

பாதிரிவேடு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்

* 701 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டத்திலுள்ள பாதிரிவேடு—மாதர்பாக்கம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் மிகப் பழுதுபட்டுள்ளமையால், அதை விரைவில் பழுதுபார்க்கும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம். இப்பள்ளிக்கும், இதைப் போன்ற பழுதான செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மற்றும் சில பள்ளிகளுக்கும் பழுதுபார்க்க ஆகும் செலவினத்தை எங்ஙனம் ஏற்பது என்பது குறித்து தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) உடனும், பள்ளிக் கல்வி இயக்குநருடனும் தொடர்பு கொண்டு பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன்: இந்த உயர்நிலைப் பள்ளியினுடைய கட்டடங்கள் எல்லாம் கூரை உட்பட மிகவும் பழுதுபட்டிருப்பதால் 1973 ஆம் ஆண்டிலே நிவாரண நிதியின் மூலமாக பழுதுபார்க்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. இந்த ஆண்டிலே கட்டடம் முழுவதும் பழுதுபார்க்கப்பட்டுவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதிலே தலைமைப் பொறியாளரும், பள்ளிக் கல்வி இயக்குநரும் பரிசீலனை செய்தாக வேண்டும். ஆகவே, இருவரையும் விரைவிலே தங்களுடைய அறிக்கையை அனுப்புமாறு அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.